
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1102

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## உடன்பிறப்பே

நீரை.மகேந்திரன்

147

தி.மு.கழக வரலாற்றில் இடம்பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த **தஞ்சை மிசா.எஸ்.நடராசன்** அவர்களின் வரலாற்றைப் பார்க்கலாம்.

# மிசா.எஸ்.நடராசன்
# தஞ்சை கழகத்தின் அரண்!


ஓவியம் : ரவி பேலட்

*1962*-ஆம் ஆண்டு தேர்தல் களம், தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றில் கழகத்தின் வளர்ச்சியை அடையாளப்படுத்திய ஆண்டு. சமூக மரியாதையும் அரசியல் செல்வாக்கும் கொண்ட பெரும் செல்வந்தர்களை வீழ்த்தி, சாமானியர்கள் பெருவாரியாகச் சட்டமன்றத்துக்குள் நுழைந்த ஆண்டு. தஞ்சாவூரில், அப்படிப் பெரும் செல்வந்தர், செல்வாக்கு கொண்ட முக்கிய பிரமுகரை வீழ்த்தி வெற்றி கொண்டார். காங்கிரசின் கோட்டையாகக் கருதப்பட்ட தஞ்சாவூரில் கலைஞர் வென்றது, வரலாற்று வெற்றியாகப் பதிவுசெய்கிறது வரலாறு.

இத்தனைக்கும் கலைஞரை எதிர்த்து நின்ற வேட்பாளருக்கு ஆதரவாகப் பெரியார் வந்து பிரச்சாரம் செய்தும் அவர் வெற்றி பெறவில்லை. பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் கலைஞரே வெற்றிபெற்றார்.

அந்த வெற்றிக்குப் பின்னால், பேரறிஞர் அண்ணாவின் முழக்கம், கலைஞரின் சூறாவளிப் பிரச்சாரம் எனப் பல காரணங்கள் இருந்தாலும், கழகத்தினர் உருவாக்கி வைத்திருந்த கழக அடித்தளமே காரணம் எனப் பெருமையுடன் குறிப்பிட்டார் கலைஞர். தஞ்சை கழகத்தினர் மக்களுடன் கொண்டிருந்த நேரடி உறவே கலைஞரின் வெற்றியைப் பதிவுசெய்தது. அந்த வெற்றிக்குப் பக்கபலமாக இருந்த உடன்பிறப்பு, எஸ். நடராசன். மிசா எஸ்.நடராசன் அல்லது சுருக்கமாக எஸ்.எம். என்றால் தஞ்சை மண்டலம் எளிதில் அறியும். முத்தமிழறிஞர் கலைஞரின் நண்பர். கழகத்தின் சோதனைக் காலங்களில், கலைஞரை தலைவராக ஏற்றுக்கொண்ட கொள்கைத் தீரர்.

'அன்றைய தஞ்சாவூரின் அரசியல் களத்தைத் திராவிட இயக்கத்தின் பக்கம் திருப்பிய அந்த உடன்பிறப்பு, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் வழிகாட்டுதலை வாழ்க்கை நெறியாகக் கொண்டு உழைத்த சுயமரியாதைச் சுடர்' எனப் பெருமையுடன் கலைஞர் குறிப்பிடும் உடன்பிறப்பு.

நடராசன் அவர்களின் மக்கள் செல்வாக்கைச் சொல்ல வேண்டுமெனில், 1977 மற்றும் 1981-ஆம் ஆண்டுத் தேர்தல்களில் அன்றைய சுழல் அரசியல் நிலைமையிலும் தஞ்சாவூரில் தனது வெற்றியைப் பதிவுசெய்தவர். அந்த அளவுக்கு பெரும் செல்வந்தர்களின் கோட்டையாகக் கருதப்பட்ட தஞ்சாவூரை, திராவிட இயக்கத்தின் களமாக மாற்றிய அரசியல் செயல்வீரர்.

1924-ஆம் ஆண்டு, செப்டம்பர் 20-ஆம் தேதி பிறந்தவர். 20 வயதுகளிலேயே பெரியாரின் பேச்சு, எழுத்துகளால் ஈர்க்கப்பட்டவர், திராவிடர் கழகத்தின் தஞ்சை மண்டலத்தில் பெரும் போராளியாகப் பெயரெடுத்தார். கழகத்தின் தொடக்க காலத்திலிருந்தே அன்றைய ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் களப்பணியாளராக அறியப்பட்டார்.

### மிசா உண்ணாவிரதம்

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்துகொண்டு சிறை சென்றவர். 1951-ஆம் ஆண்டு, தஞ்சையில் ராஜாஜிக்கு கருப்புக் கொடி காட்டும் போராட்டம், 1953 மும்முனைப் போராட்டம், 1958 எஸ்.எம்.டி. பஸ் தொழிலாளர் போராட்டம் எனப் பல களப் போராட்டங்களில் கலைஞருடன் இணைந்து களம் கண்டவர் நடராசன். 1964-ஆம் ஆண்டு சட்ட நகல் எரிப்புப் போராட்டத்தின்போது, தஞ்சையில் கலைஞர், மன்னையாருடன் மாயவரம் கிட்டப்பா, எஸ்.நடராசன் அவர்களும் முன்னிலையில் நின்றார். நெருக்கடி நிலை காலத்தில் கைதுசெய்யப்பட்டு சிறை சென்றவர். சிறையில் 14 நாட்கள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி, கொடுமைகளுக்கு ஆளானவர்.

தஞ்சை நகரச் செயலாளராகத் தொடர்ந்து 25 ஆண்டுகள் பணியாற்றியவர். 1959-ஆம் ஆண்டு, தஞ்சை நகரக் கழகத்தின் செயலாளராகப் பொறுப்பு வகிக்கத் தொடங்கி, தனது இறுதிக்காலம் வரை அந்தப் பொறுப்பில் இருந்தார்.

### தொடர்ந்து மூன்று முறை

தமிழ்நாட்டின் சட்டமன்ற உறுப்பினராகத் தொடர்ந்து மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டவர். 1967-ஆம் ஆண்டு, தஞ்சாவூர் தொகுதியின் வேட்பாளராக நின்று வெற்றிபெற முடியவில்லை என்றாலும், 1971, 1977 மற்றும் 1980 ஆகிய ஆண்டுகளில் தஞ்சாவூர் தொகுதியிலிருந்து மூன்று முறை தொடர்ச்சியாக வெற்றிபெற்றார். தனது மூன்றாவது பதவிக்காலத்தின்போது, 23 பிப்ரவரி 1984 அன்று அவர் காலமானார்.

1964-ஆம் ஆண்டில், தஞ்சை நகர் மன்ற உறுப்பினரானார். அதன்பின்னர், தொடர்ச்சியாக தஞ்சை மாவட்டத்தின் வளர்ச்சியில் பங்குகொள்ளும் வகையில் பல பொறுப்புகளில் இருந்தவர். தஞ்சை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர், கரந்தை தமிழ்ச் சங்கத் தலைவர், விளையாட்டுக் கழகங்களில் தலைவராகச் சிறப்புடன் தனது பங்களிப்பைச் செய்தவர்.

எம்.ஜி.ஆர். தனிக்கட்சி கண்டபோது, பல முறை நடராசனை இழுக்கும் முயற்சிகள் நடைபெற்றன. ஆனால், அந்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியடைந்தன. ஏனென்றால், அவரை இயக்கியது அரசியல் அதிகாரம், பதவி ஆசை அல்ல. திராவிடக் கொள்கைகள், சுயமரியாதை உணர்வு, பெரியார் - அண்ணா வழிதான் அவரை இயக்கியது. கலைஞரின் தலைமையே கழகம் என இயங்கியவர்.

1982-ஆம் ஆண்டு, நடராசன் இல்லத்திருமண விழாவில் கலந்துகொண்ட கலைஞர், கழகம் ஆட்சியில் இருந்தாலும் இல்லையென்றாலும் மக்களின் நம்பிக்கையைப் பெற்றுள்ளது என்பதற்கு அடையாளம்தான் நடராசன் எனப் புகழ்ந்தார். நடராசன் அவர்கள் குறித்து கலைஞர் குறிப்பிடுகையில், 'சிதம்பரத்து நடராசர் நடனமாடுவதற்காக ஒற்றைக் காலில் நிற்கிறார். இந்த நடராசர், தான் கொண்ட கொள்கைக்காக - எடுத்த காரியத்தை முடிப்பதற்காக ஒற்றைக் காலில் நிற்கக்கூடியவர்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

> “கழகம் ஆட்சியில் இருந்தாலும் இல்லையென்றாலும் மக்களின் நம்பிக்கையைப் பெற்றுள்ளது என்பதற்கு அடையாளம்தான் நடராசன் எனப் புகழ்ந்தார் கலைஞர்.”

### எல்லைகளைக் கடந்த அஞ்சலி

1984-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23-ஆம் தேதி அவர் இயற்கை எய்தியபோது, எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர் என்பதையும் தாண்டி, தனது அமைச்சரவை சகாக்களை அஞ்சலி செலுத்த அனுப்பினார் எம்.ஜி.ஆர். தஞ்சாவூரில் நடராசன் அவர்களால் வளர்க்கப்பட்டவர்களே அன்று எதிர்க் கட்சியிலும் இருந்தனர் என்பதால், அவரது இறுதி ஊர்வலம், கட்சி எல்லைகளைக் கடந்ததாக இருந்தது எனக் கழகத்தினர் குறிப்பிடுகின்றனர்.

அவர் மறைந்து நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகும், ஒவ்வோர் ஆண்டும் அவரை நினைவுகூர்ந்து வருகின்றனர், தஞ்சை மாவட்டக் கழகத்தினர். அதற்கே சாட்சியாகக் கடந்த 2024-ஆம் ஆண்டு, அவருக்கு மாவட்ட, நகரக் கழகங்களின் ஏற்பாட்டில் நூற்றாண்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. அந்த நிகழ்ச்சிகள், அவர் விதைத்த கொள்கை, தலைமுறைகளைக் கடந்து நிற்கும் என்பதற்குச் சான்று. கொள்கைக்காக வாழ்ந்தவரின் நினைவு; சுயமரியாதை அரசியல் செய்தவரின் நினைவு; காலம் கடந்தும் தலைமுறைகள் கடந்தும் நினைக்கப்படும் என்பதும், கழகம் அந்தப் பணியைக் கைவிடாது என்பதும் வரலாற்றில் என்றும் எழுதி வைக்கப்படும் என்பதற்கான ஆவணம்.

...துடிக்கும்

## அரசுப் பள்ளிகள் உயர்வு; தனியார் பள்ளிகள் சரிவு!

நாடு முழுவதும் மூடப்பட்டுள்ள அரசுப் பள்ளிகளின் எண்ணிக்கை குறித்து கேரளத்தைச் சேர்ந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் எம்.பி. ஜான் பிரிட்டஸ் கேள்வி எழுப்பியுள்ளார். அதற்கு ஒன்றிய கல்வி அமைச்சகம் அளித்துள்ள பதிலில், நாடு முழுவதும் கடந்த 2020 - 21 ஆம் ஆண்டில் 10,32,049 ஆக இருந்த அரசுப் பள்ளிகளின் எண்ணிக்கை 2024 - 25 ஆம் ஆண்டில் 10,13,322 ஆகக் குறைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளது. அதாவது, கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் 18,727 அரசுப் பள்ளிகள் நாடு முழுவதும் இழுத்து மூடப்பட்டுள்ளன.

குறிப்பாக, பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில்தான் அரசுப் பள்ளிகள் அதிக அளவில் இழுத்து மூடப்பட்டுள்ளன. அதிகபட்சமாக, மத்தியப்பிரதேசத்தில் 6,902 பள்ளிகளும், அசாமில் 2008 பள்ளிகளும், ஒடிசாவில் 1,631 பள்ளிகளும் மூடப்பட்டுள்ளன. ஜம்மு - காஷ்மீரில் 4,382 அரசுப் பள்ளிகள் மூடப்பட்டுள்ளன. ஆனால் இதே காலகட்டத்தில், தமிழ்நாட்டில் கூடுதலாக 37 அரசுப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன.

உத்தரப்பிரதேசத்தில் 7,767 தனியார் பள்ளிகள் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன. அசாம், பீகார், சத்தீஸ்கர், ஹரியானா, ஜார்கண்ட் மாநிலங்களிலும் தனியார் பள்ளிகளின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ளது. அதே வேளையில், தமிழ்நாட்டில் 512 தனியார் பள்ளிகள் மூடப்பட்டுள்ளன. திராவிட மாடல் ஆட்சியில், கல்வியில் சிறந்து வருகிறது தமிழ்நாடு என்பதை ஒன்றிய அரசின் புள்ளிவிவரங்களே உறுதிப்படுத்துகின்றன.

## ஃப்ளாஷ்பேக்



### ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்து!


எஸ்.ஆர்.பாலு

2012-ஆம் ஆண்டுப் புத்தாண்டின்போது, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை, கோபாலபுரம் இல்லத்தில் சந்தித்து வாழ்த்துப் பெற்றேன். அப்போது, எழும்பூர் தெற்குப் பகுதி ஆதி திராவிடர் நலக்குழு துணை அமைப்பாளராக இருந்தேன். தலைவருடன் இன்றைய கழகத் துணைப் பொதுச் செயலாளர் அண்ணன் ஆ.ராசா அவர்களும் இருந்தார். தலைவரைக் கண்டு மகிழ்ந்த அந்த நாள், இன்றும் என் நினைவில் மகிழ்ச்சி அளிக்கும் நாளாகத் திரும்பிப்பார்க்க வைக்கிறது.

**- எஸ்.ஆர்.பாலு,**
**மீனவர் அணி பகுதி அமைப்பாளர்,**
**எழும்பூர் தெற்குப் பகுதி, சென்னை கிழக்கு மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### மாநில சுயாட்சித் தீர்மானம்!

1974-ஆம் ஆண்டு ஏப்ரல் 16-ஆம் தேதி, மாநில சுயாட்சி முழக்கத்தின் வரலாற்றில் முக்கியமான நாள். அன்றுதான் இந்தியாவிலேயே முதன்முதலாக, தமிழ்நாடு சட்டமன்றத்தில் மாநில சுயாட்சித் தீர்மானத்தை முன்மொழிந்து, முதலமைச்சர் கலைஞர் உரையாற்றினார். நீண்ட விவாதங்களுக்குப் பின்னர், 20.04.74 அன்று கழகத்தின் கொள்கையான மிக முக்கிய முழக்கம், சட்டமன்றத்தில் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131